இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 25 ISSUE 04 APRIL 2025

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-

# வீணான மனுஷனே



இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN




தொடர்புக்கு : 94980 00449 , 94428 00449



# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ரோமர் 8:28–ல் அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்ற வார்த்தையின்படி ஏறக்குறைய 35 வருடமாக நாம் நடத்தி கொண்டிருந்த இயேசுவை தினம் பார்க்கிறேன் மாத இதழ், பிரிண்டிங் பிரஸ் மாற்றத்தால் நம்முடைய அஞ்சலகப் பதிவை ரத்து செய்து விட்டார்கள். அதனால் நாம் கூடுதலாக ஒரு புத்தகத்திற்கு 5 ரூபாய் செலுத்தி அனுப்ப வேண்டியுள்ளது. மறுபடியும் நாம் அதை சரி செய்து அனுப்ப சில மாதங்கள் ஆகும். அது வரைக்கும் டிஜிட்டல் முறையில் மட்டுமே மாத இதழை வாட்ஸ் ஆப் மற்றும் ஈ மெயில் மூலமாக அனுப்ப வேண்டியுள்ளது. நாம் அதை சரி செய்து அனுப்பவும், விரைவில் நமக்கு எல்லாம் சரியாகவும், நாம் பிரிண்டிங் பண்ணி அனுப்பவும் ஜெபித்து கொள்ளுங்கள். கடந்த நாட்களில் நடைபெற்ற வானத்தின் வாசல் உபவாச ஜெபங்களையும், மதுரையில் நடைபெற்ற உபவாச ஜெபத்தையும், தஞ்சாவூரில் நடைபெற்ற தவக்கால சிறப்பு கூட்டத்தையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். திரளான மக்கள் கலந்து கொண்டு தேவஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்றார்கள். நமது ஜெபமையத்தில் வைத்து ஏப்ரல் 23 முதல் 26 ஆம் தேதி வரை சுவிசேஷப் பயிற்சி முகாம் நடைபெறுகின்றது. இதிலே நானும், அன்பு சகோதரன் தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்களும், சகோதரன் T. ஸ்டீபன் அவர்களும் இணைந்து பயிற்சி அளிக்க இருக்கின்றோம். சுவிசேஷ அழைப்பை பெற்ற, சுவிசேஷம் அறிவிக்க ஆர்வமும், பாரமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். கர்த்தருக்குச் சித்தமானால் நம்முடைய வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையம் ஆரம்பித்து, 25–ஆம் வருடத்திற்குள் நாம் கடந்து செல்ல இருக்கின்றோம். ஏப்ரல் 30–ம் தேதியன்று 25–ம் ஆண்டு ஸ்தோத்திரக் கூட்டம் வைத்துள்ளோம், இக்கூட்டத்தில் அண்ணன் மோகன் C. லாசரஸ் அவர்கள் தேவசெய்தி அளிக்கிறார்கள். நீங்களும் வாருங்கள், உங்களுக்குத் தெரிந்தவர்களையும் அழைத்து வாருங்கள். தொடர்ந்து நமது மீடியா நிகழ்ச்சிகளுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபித்து கொள்ளுங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.




இயேசுவின் பணியில்

L. Vincentraj

(சகோ .L.வின்சென்ட்ராஜ்)

# வீணான மனுஷனே



சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

**வீணான மனுஷனே கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? யாக்கோபு 2:20**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய வார்த்தையின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**வீணான** மனுஷனே என்று யாக்கோபு 2:20-ல் வேதம் நம்மை அழைக்கின்றது. **நல்ல மனுஷனே, ஜீவனுள்ள மனுஷனே** என்று அழைக்கப் பார்த்திருக்கிறோம். ஆனால் இங்கு வேதம் வீணான மனுஷனே என்று மனுஷனுக்கு ஒரு பெயர் வைக்கிறது. **மனுஷனே நன்மை இன்னதென்று** அவர் உனக்கு சொல்லியிருக்கிறார் என்றும், நீ என் பார்வையில் **விலையேறப் பெற்றவன்** என்றும், **கனத்துக் குரியவன்** என்றும், **அற்ப மனிதனே** என்றும், எலியா நம்மைப் போல பாடுள்ள **மனிதன்** என்றும், **அற்ப ஆயுசுள்ள மனிதன்**, பூவுக்கும் **புல்லுக்கும் ஒப்பான மனிதன்** என்று வேதத்தில் மனிதனுக்குப் பல பெயர்கள் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் யாக்கோபு தன்னுடைய நிருபத்திலே மனிதனுக்கு ஒரு துணைப் பெயர் வைக்கிறார். துணைப் பெயர் என்றால் பட்ட பெயர், புனைப்பெயர். சீமோன் என்றால் நாணல் என்று பெயர். ஆண்டவர் பெயர் வைத்தால் நச்சென்று பெயர் வைப்பார். சீமோன் நாணலைப் போல இந்த பக்கமும் அந்த பக்கமும் சாய்கின்றவராக இருந்தார். அதனால் தான் ஆண்டவர் யோனாவின் குமாரனாகிய சீமோனே என்று அவனை அழைத்தார். இன்றைக்கு ஆண்டவர் உங்கள் பெயரை எழுதி வைத்திருக்கிறார். உன்னை என் உள்ளங்கையில் வரைந்து வைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறார். உங்கள் கைகளில் உள்ள ரேகை கூட அவருக்கு தெரியும். ஆண்டவர் மீது உங்களுக்கு அன்பு இருந்தால் தான் நீங்கள் அதிகாலையில் எழுந்திருப்பீர்கள். ஆண்டவருக்கு நீங்கள் செவி கொடுத்தால், அவருடைய வார்த்தையினால் உங்களை நிரப்பி நடத்துவார். தேவனுடைய வார்த்தையை உங்களுக்கு ரேமாவாக அனுப்பி விடுகிறார். அவர் சொல்லுகிறார் வீணான மனுஷனே கிரியை இல்லாத விசுவாசம் செத்தது என்று நீ அறிய வேண்டுமோ? இந்த செய்தியை வாசிக்கின்ற நீங்கள் வீணான மனிதர்களா சிந்தித்துப் பாருங்கள். இந்த உலகத்தில் அநேகர் வேலை யில்லை என்று சொல்லுகிறார்கள்.

இன்றைக்கு அநேகம் பேர் செல்போனுக்கு அடிமையாக இருக்கிறார்கள். இந்த செல்போன் வந்ததிலிருந்து அநேக வாலிபர்கள் வேலைக்கு செல்வதில்லை. அதற்கு அடிமையாகி தாங்கள் வாழ்க்கையை, நேரத்தை, நாட்களை செல்போனில் வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். செல்போன் உங்களை ஜெபிக்க விடுவதில்லை. வேதம் வாசிக்க விடுவதில்லை. தேவன் மேல் உங்கள் கவனத்தை வைக்க விடுவதில்லை. ஆனால் சாத்தானுடைய ஒரே வேலை உங்கள் மீது கவனம் வைப்பது தான். உங்களைத் திசை திருப்பி உங்கள் வாழ்க்கையை பாழாக்கி, கெடுத்து விட வேண்டும் என்பது தான். அதனால் தான் யாக்கோபு இப்படிப்பட்டவர்களைப் பார்த்து சொல்லுகிறார் வீணான மனுஷனே என்று. ஐந்து நிமிடத்திற்கு மேல் நாம்

செல்போன் பேசுவோம் என்றால் நம் சரீரத்தில் இருக்கிற நரம்புகளுக்கு பாதிப்பை அது உண்டாக்கி விடும்.

## வீணான வார்த்தை

**நீதி 10:19-ல் சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது. தன் உதடுகளை அடக்கு கிறவனோ புத்திமான்.** இந்த வசனம் கத்தோலிக்க மொழிபெயர்ப்பில் இப்படி சொல்லப்பட்டுள்ளது நீண்ட பேச்சினால் நம் வாழ்கையில் பாவம் வரும் என்று சொல்லப்பட்டுள்ளது. சிலர் பரிகாசமான பேச்சுகளை பேசுவார்கள். இன்னும் சிலர் மற்றவர்களைப் பற்றியே பேசிக் கொண்டிருப் பார்கள். சிலர் புரணி பேசிக் கொண்டே இருப்பார்கள். தேவனைப் பற்றி பேச மாட்டார்கள். உங்களுடைய பேச்சு சுருக்கமாக இருக்க வேண்டும். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அதே அளவினால் உங்களுக்குத் திரும்ப அளக்கப்படும் என்று வேதத்தில் சொல்லப் பட்டுள்ளது. சிலர் சுருக்கமாகத்தான் பேசுவார்கள். சிலரை பார்த்திருக்கிறோம் தேவையில்லாமல் அவர்கள் பேச மாட்டார்கள். மற்றவர்கள் பேசினால் கூட சிரித்து விட்டு அமைதியாக இருப்பார்கள். அதுதான் தன் ஆவியை அடக்குகிற மனுஷன். இந்த வசனத்தை நாம் வாசித்துப் பார்த்தால் வீணான பேச்சு, வீணான வார்த்தை நீண்ட மொழி என்று சொல்லப்பட்டுள்ளது. லூக்கா 18 ஆம் அதிகாரத்தில் இரண்டு பேர் ஜெபிக்க ஆலயத் திற்கு போயிருந்தார்கள். ஒருவர் பரிசேயன். மற்றொருவர் ஆயக்காரன். பரிசேயன் தேவ சமூகத்தில் நீண்ட பேச்சு பேசி ஜெபித்தார். வாரத்தில் இரண்டு தரம் நான் உபவாசிக்கிறேன், பத்தில் ஒரு பங்கு தசமபாகம் செலுத்துகிறேன், இந்த ஆயக்காரனைப் போல் நான் இராததினால் உண்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்று சொல்லி ஜெபித்தார். ஆனால் ஆயக்காரர் இரண்டே வார்த் தையில் சுருக்கமாய் பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்று சொல்லி ஜெபித்தார். இன்றைக்கு நம்முடைய ஜெபங்களும் தேவ சமுகத்தில் அளப்புகிறதாக இராமல் சுருக்கமானதாய் இருக்க வேண்டும். தேவையில்லாததெல்லாம். மிஞ்சினதெல்லாம் தீயவன் இடத்திலிருந்து வரும் என்று சொல்லப்பட்டுள்ளது.

இன்றைக்கு இந்த உலகத்தில் நாம் வாழும் போது நம்முடைய நேரம் ரொம்ப முக்கியம். நாம் செய்கின்ற வேலைகள் ரொம்ப முக்கியம். ஒருமுறை தான் இந்த உலகத்தில் நாம் வாழ்கிறோம், பின்பு கடந்து போகிறோம். சிலர் சொல்லுவார்கள் ஏழு ஜென்மம் என்று, அடுத்த ஜென்மத்தில் நான் இப்படி இருக்க வேண்டும் என்று தங்களை குறித்து சொல்லுவார்கள். அடுத்த ஜென்மமே கிடையாது வேதத்தில் ஒருவன் ஆண்டவரிடத்தில் வந்து கேட்கிறான் என் சகோதரன் திருமணமாகி சந்தான மில்லாமல், குழந்தை இல்லாமல் மரித்து போய் விட்டான். அவனை என்னுடைய மற்றொரு சகோதரன் திருமணம் செய்தான். அவனும் சந்தானமில்லாமல் மரித்து போய் விட்டான். இப்படி எங்களில் ஏழு பேரும் அவளை திருமணம் செய்து, பின்பு சகோதரர் அனைவருமே சந்தானமில்லாமல் மரித்து போய் விட்டார்கள். இது நீண்ட பேச்சு. இப்பொழுது அவன் ஆண்டவரிடம் கேட்கிறான். பரலோகத்தில் எங்களில் யாருக்கு அவள் மனைவியாக இருப்பாள். பரலோகத்தில் அழுகை இல்லை. துக்கம் இல்லை. புலம்பல் இல்லை என்று வேதம் சொல்லுகிறது. சரீரம் பரலோகம் போகாது மண்ணோடு மண்ணாகி போய் விடும். நம்முடைய ஆத்துமா மட்டும் தான் பரலோகத்திற்கு செல்லும். ஆத்துமா அழிவில்லா தது. அது தன்னைத் தந்த தேவனிடத்திற்கு செல்கிறது. சரீரமும் மாம்சமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது

பரலோக ராஜ்யத்தில் பெண் கொள்வதும் இல்லை. பெண் கொடுப்பதும் இல்லை. அங்கே நாம் எல்லாரும் மகிமையாய் தேவ தூதர்களுக்கு ஒப்பாக இருப்போம். பரலோகத்தில் இவள் எங்களில் யாருக்கு மனைவியாக இருப்பாள் என்று கேட்டது தவறு. எங்கள் சித்தப்பா அங்கே இருப்பார், இவங்க இருப்பாங்க, அவங்க இருப்பாங்க என்று எதிர்பார்ப்பதும் தவறு. இந்த பொல்லாத உலகத்தில் நாம் ஒன்றை தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும் நீங்கள் நித்தியவாசிகள் என்று. நம்முடைய மாம்சமும் இரத்தமும் இந்த பூமியோடு முடிந்து போய் விடும். நித்தியமாக ஆண்டவருடன் வாழத்தான் இந்த பூமியில்

நம்முடைய ஆத்துமாவை அவர் இரட்சித்திருக்கிறார். அதனால் தான் நாம் இந்த வீணான வாழ்க்கையை விட்டு விட வேண்டும். வேதத்தில் மார்த்தாளைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். ஆண்டவரே இப்படியாக சொல்லுகிறார் மார்த்தாளே மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய் தேவையானது ஒன்றே. இன்றைக்கு உங்களில் கூட அநேகர் மார்த்தாள்களாகத்தான் இருக்கிறீர்கள். அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு கலங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட தேவையில்லாத காரியங்களில் இருந்து தேவன் உங்களை விடுதலையாக்கப் போகிறார். ஒரு வாலிபத் தம்பி என்னிடத்தில் வந்து அங்கிள் நான் வரும்போது ஒரு மீசைக்காரர் என்னை முறைத்து பார்த்துக் கொண்டே வண்டி ஓட்டிச் சென்றார் என்று சொன்னான். அப்பொழுது நான் அவனிடம் சொன்னேன் உன்னை பார்த்து வண்டி ஓட்டினால் அவர் எப்படி வண்டி ஓட்ட முடியும். நீ அவரைப் பார்த்த விதம் தவறானது என்று சொன்னேன்.

இப்படி இந்த உலகத்தில் அநேகர் மற்றவர்களைப் பற்பல விதங்களில் பார்க்கின்றார்கள். நம்மில் அநேகர் பற்பல காரியங்களை குறித்து கவலைப்பட்டு கலங்குகிறோம். ஆனால் வேதம் சொல்லுகிறது தேவையானது ஒன்றே என்று. தேவையானது ஒன்று என்றால் தேவையில்லாதது 99 என்று அறிந்து கொள்ளுங்கள். புரிந்து கொள்ளுங்கள். மரியாள் வீணான வார்த்தைகளை பேசாமல். புரணி பேசாமல். அடுத்தவர்களை தூக்கி வைத்து பேசாமல் என்னை மாதிரி யாராவது உண்டா என்று சொல்லாமல். புகழ்ந்து பேசுவது. பூசணிக்காயை போட்டு உடைப்பது அப்படியெல்லாம் இராமல் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்காகிய ஆண்டவரைத் தெரிந்து கொண்டு அவருடைய பாதத்தில் அமர்ந்திருந்தாள். இந்த மரியாளைப் போல நம்மையும் விலையேறப் பெற்றவர்களாய் மாற்றி. தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொள்ளத்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்காக சிலுவையில் இரத்தம் சிந்தினார். நீங்கள் சாதாரனமானவர்கள் அல்ல. உங்களுடைய வாழ்க்கையில் 24 மணி நேரத்தில் 24 மணி நேரமும் அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கை வாழ்கிறவர்களாய் நீங்கள் இருக்க வேண்டும்.. உங்கள் பேச்சில் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். உங்கள் ஜெபத்தில் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். நீங்கள் ஊழியம் செய்வதில் ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். சும்மா காற்றோடு பறக்கின்ற பதரைப் போல நம் வாழ்க்கையில் இருந்து விடக்கூடாது. கோதுமை மணியாக நம் வாழ்க்கை மாற வேண்டும். நீங்கள் இன்று செய்கின்ற ஜெபத்திற்கு இன்றைக்கே பதிலைக் காண வேண்டும். அடுத்த வாரத்தில் அல்ல.

## வீணான வாழ்க்கை

கிராமத்தில் பெரியவர்கள் சொல்லுவார்கள் இவன் வீணாகப் போய் விட்டான். இவன் வாழ்க்கை வீணாகிப் போய் விட்டது. படிக்காமல் போய் விட்டான். சினிமா பார்த்து கெட்டுப் போய் விட்டான் என்று சொல்வார்கள். இன்ஜினியரிங் படித்து முடித்து விட்ட ஒரு மகள். இன்ஜினியர் படிப்பிற்கான வேலையை தேடுவதை விட்டுவிட்டு செல்போனை எடுத்துக் கொண்டு காலையில் செல்லும் மகள். மாலை வரை தன் நேரத்தை அதிலேயே செலவிடுகிறாள். வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வழியைப் பார்க்காமல் தன்னுடைய வாழ்நாட்களை எல்லாம் வீணடித்துக் கொண்டிருக்கிறாள். ஒரு மனிதன் 75 லட்சம் ரூபாய் செலவு செய்து கர்ப்பிணியாகிய தன் மனைவியை அழைத்துக் கொண்டு அமெரிக்கா சென்றார். அங்கு தன் மனைவிக்கு குழந்தை பிறந்தால் தங்களுக்கு அந்த நாட்டின் குடியுரிமை கிடைத்து விடும் என்று நினைத்தார். ஆனால் மூன்றே மாதத்தில் அவரை அந்த நாட்டில் இருக்க கூடாது என்று சொந்த நாட்டிற்கு அனுப்பி விட்டார்கள். 75 லட்சம் பணமும். வாழ்க்கையும் வீணாகி போய் விட்டது. இப்படிப்பட்ட வீணான வாழ்க்கை வாழக் கூடாது. சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களை எச்சரிக்கிறார். எப்பவும் வாக்குவாதம் செய்வது. சண்டை போடுவது. குறை சொல்வது இருக்கக் கூடாது. இஸ்ரவேல் ஜனங்கள் சாமுவேலிடம் வாக்குவாதம் பண்ணி மறையிட்டார்கள். தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்டார்கள்.

இஸ்ரவேல் மக்கள் சாமுவேலிடம் வாக்குவாதம் பண்ணினபடியால் கர்த்தர் வானத்திலிருந்து இடிமுழக்கம் உண்டான செய்தார். ஜனங்களுக்குள் பயம் உண்டாயிற்று. 1 சாமு 12:21-ல் விலகிப் போகாதிருங்கள்; மற்றப்படி பிரயோஜன மற்றதும் ரட்சிக்கமாட்டாததுமாயிருக்கிற வீணானவைகளைப் பின்பற்றுவீர்கள். அவைகள் வீணானவைகளே.

தேவனை விட்டு விலகிப் போகக் கூடாது. வீணானவைகளைப் பின்பற்றக் கூடாது. நீங்கள் ஒரு இடத்திற்கு போவதின் மூலம், ஒரு காரியத்தை செய்வதின் மூலம், பணத்தை செலவழிப்பதின் மூலம் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை வருமா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நீங்கள் எந்த இடத்திற்குப் போனாலும் அங்கு தேவனுடைய வார்த்தையை சொல்லுகிறீர்களா? ஒன்றுக்கும் பிரயோஜனப்படாதவர்கள் கிருபையைப் போக்கடிக்கிறார்கள். அதைத்தான் இங்கு சாமுவேல் **இரட்சிக்கமாட்டாததுமா யிருக்கிற வீணானவைகளைப் பின்பற்று வீர்கள், அவைகள் வீணானவைகளே என்று** சொல்லுகிறார். நீங்கள் எந்த இடத்திற்குச் சென்றாலும், என்ன வேலை செய்தாலும், எந்த பொருள் வாங்கினாலும் அதில் தேவ நாமம் மகிமைப்பட வேண்டும். உங்களுடைய நேரத்தைக் குறித்து, பேச்சைக் குறித்து, உங்களை இந்த பட்டணத்தில் வைத் ததைக் குறித்து தேவனிடத்தில் கணக்கு கொடுக்க வேண்டும். எங்கேயே, எப்படியே வாழ்ந்த உங்களை அவர் இரட்சித்தாரே அவருக்காக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள். இரட்சிக்கமாட்டாததுமாயிருக்கிற வீணானவைகளுக்காக பணத்தை, நேரத்தை செலவழிக்கக் கூடாது. கர்த்தருடைய பார்வையில் நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்று பாருங்கள். ஆண்டவர் உங்களைப் பார்த்து நல்லது உண்மையும் உத்தமுமான மனுஷனே என்று சொல்லுவாரா? அல்லது வீணான மனுஷனே என்று சொல்லுவாரா? சிந்தித்துப் பாருங்கள். நம் ஆண்டவர் எல்லா வற்றிற்கும் கணக்கு கேட்கிறவர். அவரை பாடுவதற்காக ஆண்டவர் எல்லாருக்கும் நாவை கொடுத்திருக்கிறார்.

## வீணான சிந்தை

இன்றைக்கு நிறைய பேருக்கு சிந்தையில் போராட்டம் ஜெபிக்க முடியவில்லை. என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருப் போனாகில் கர்த்தர் எனக்கு செவி கொடார். என் ஜெபத்தைக் கேட்க மாட்டார். ஏன் உங்கள் சிந்தையில் வேதவசனம் வரவில்லை. ஒரு மனிதனைப் பற்றி நல்ல எண்ணம் வரவில்லை. எப்படி ஒரு மனிதன் சிந்தையில் வீணராகிறான் **ரோமர் 1:21-23-ல் அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்** என்று சொல்லப்பட்டுள்ளது. யூதர்களுக்கு இயேசு யார் என்று தெரிந்திருந்தும், அவரை மனிதனாக மாத்திரம் தான் பார்த்தார்கள். இயேசு தேவன் என்றும், இரட்சகர் என்றும் தெரிந்திருந்தும் முறுமுறுத்தார்கள். இவர் மனுஷகுமாரன் இவரை போய் தேவனுக்கு ஒப்பாக்க முடியுமா? என்று நினைத்தார்கள். இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். உன்னை நீயே இரட்சித்துக் கொள் அப்பொழுது உன்னை நம்புவோம் என்று பரியாசம் செய்தார்கள். நீங்கள் எப்படி வீணராகிறீர்கள் என்றால் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து சிந்தையில் வீணராகிறீர்கள். தேவனை அறிந்திருந்தும் அவரோடு பேசவில்லை, அவருடைய முகத்தை தேடவில்லை, அவரை அறியவில்லை. உங்கள் வாழ்க்கையில் அவருக்கு நேரம் கொடுக்க வில்லை. உங்களிடம் பேச விரும்பும் தேவனுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. உணர்வில்லாதவர்கள் என்றால் என்ன? இருதயம் மந்தமாக இருப்பது. சுகர் கூடினால் கால்,கை மரத்துப் போவது, காது அடைப்பது, நாம் உடம்பில் இரத்த ஓட்டம் சரியாக இல்லாமல் இருப்பது.

ஆவிக்குரிய வாழ்வில் இரத்த ஓட்டம் சரியாக இருக்க வேண்டும். சபையில் எல்லாக் காரியங்களையும் சரியாக செய்து விட்டு சிந்தையில் கொட்டு போய் விடக்கூடாது. தேவனை அறிந்திருக்கின்ற நீங்கள் அவரை மகிமைப்படுத்தி, ஸ்தோத்தரிக்க வேண்டும். நீங்கள் கர்த்தரை பாடி மகிமைப்படுத்தும் போது சிந்தையில் உள்ள போராட்டங்கள் மாறும். தேவையில்லாத கவலைகள் வெளியேறுவதை அறிந்து கொள்வீர்கள்.

சகரியா தேவனை அறிந்திருந்தும், ஊழியக்காரனாக இருந்து, காலை மாலை தேவனுடைய பணிவிடையை செய்தவனாக இருந்தும், மக்களுக்காக ஜெபிக்கிறவராக யிருந்தும் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காததால் அவர் ஊமையாக மறினார். தேவனை அறிந்திருந்த நீங்கள் வீணராகப் போகாதபடிக்கு தேவனை பாடி துதிக்க வேண்டும். சீஷர்கள் தேவனைப் பாடி துதித்த போது பரிசேயர்கள் வந்து உம்முடையவர்களை அதட்டி வையும் என்றார்கள். அதற்கு இயேசு இவர்கள் பேசாவிட்டால் இந்த கல்லுகள் கூப்பிடும் என்றார். உங்கள் வீடுகளில் நீங்கள் ஜெபிக்காவிட்டால் உங்கள் கணவர், பிள்ளைகள் நலன், எதிர்காலம் எப்படி நன்றாக இருக்கும். பிரச்சனை போராட்டங்கள் மத்தியிலும் போபு தேவனைப் பாடினார், அவரை விசுவாசித்தார். அதனால் தான் அவர் சொல்லுகிறார் நான் விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன் என்று. நீங்களும் விசுவாசித்ததை பேசுங்கள். பாடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள். உணர்வில்லாத அவர்கள் இருதயம் இருளடைந் தது என்று சொல்லப்பட்டுள்ளது. இருளை விரட் டத்தான் தேவன் உங்களுக்கு நாவைக் கொடுத் திருக்கிறார். நீங்கள் கர்த்தரை துதிக்கும் போது வீட்டில் சண்டை மூட்டும் ஆவி, சமாதானத்தை திருடும் ஆவி, பிரிவினைகளை கொண்டு வரும் ஆவி, நஷ்டத்தைக் கொண்டு வருகிற ஆவி, கடனைக் கொண்டு வருகிற ஆவி எல்லாம் ஓடிப் போய்விடும். நீங்கள் சிந்தனையில் கெட்டுப் போய் வீணராகவா? இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். அர்த்தமுள்ள வாழ்க்கை வாழும்படியாகத் தான் வந்தார். நோவா தன் காலத்தில் வாழ்ந்த மனிதர்களுக்குள் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்ந்து தேவனோடு சஞ்சரித்தார்.

அந்த பேழைக்குள் அவர் தேவனை துதித்துக் கொண்டே இருந்தார். நீங்கள் எப்பொழுதும் தேவனைத் துதித்துக் கொண்டே இருப்பீர்களானால் உங்களுடைய செயல்படாத உறுப்புகள் செயல்பட ஆரம்பித்துவிடும். கர்த்தர் தெய்வீக சுகத்தை தருவார்.

## வீணான மனிதர்கள்

நியாயா 11:3-ல் அப்பொழுது யெப்தா: தன் சகோதரரை விட்டு ஓடிப்போய், தோப் தேசத்திலே குடியிருந்தான், வீணரான மனுஷர் யெப்தாவோடே கூடிக்கொண்டு, அவனோடேகூட யுத்தத்திற்குப் போவார்கள் என்று சொல்லப் பட்டுள்ளது. வீணரான மனுஷர் அவனோடு கூடினார்கள். நாமே கடனில் இருகக்கும் போது நம்மோடு 10 கடன்காரர்கள் சேர்ந்தால் எப்படி இருக்கும் அது போலத்தான் யெப்தாவோடு சேர்ந்தார்கள். 1 நாளா 22:2-ல் ஒடுக்கப் பட்டவர்கள், கடன்பட்டவர்கள், முறுமுறுக் கிறவர்கள் யாவரும் அவனோடே கூடிக் கொண்டார்கள்; அவன் அவர்களுக்குத் தலைவனானான்; இந்தப் பிரகாரமாக ஏறக்குறைய நானூறுபேர் அவனோடிருந்தார்கள். தாவீதுக்கே தேசத்தில் இடம் இல்லை, அவர் படுத்து உறங்க இடம் இல்லை ஓடிக் கொண்டிருக்கிறார். ஆனால் 400 பேருக்கு தலைவரானார். வீணான மனிதர்கள் அவரோடு கூடிக் கொண்டார்கள். அந்த வீணான மனிதர்களைத் தான் தாவீது 1 நாளா 23:4,5-ல் அவர்களில் இருபத்து நாலாயிரம்பேர் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்களும், ஆறாயிரம்பேர் தலைவரும் மணியக்காரருமாயிருக்க வேண்டும் என்றும் நாலாயிரம்பேர் வாசல் காக்கிறவர்களாயிருக்க வேண்டும் என்றும், துதிசெய்கிறதற்குத் தான் பண்ணுவித்த கீதவாத்தியங்களால் நாலாயிரம் பேர் கர்த்தரைத் துதிக்கிறவர்களாயிருக்க வேண்டும் என்றும் தாவீது சொல்லி, அவர்களை லேவியின் குமாரராகிய கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்களுடைய வகுப்புகளின்படி வகுத்தான். அவர்கள் தேவனைத் துதித்துப் பாடினார்கள். வீணான மனிதர்களைக் கூட நல்ல மனிதர்களாக மாற்றி விட்டான். இன்றைக்கு உங்கள் வாழ்க்கையில் கூட வீணாகப் போன பணத்தை, வீணாப் போன

நேரத்தை, வீணாப் போன வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றுவார். வீணாப் போன, கெட்டுப் போன, ஒன்றுக்கும் பிரயோசனமில்லாமல் போன உங்கள் வாழ்க்கையை விலையேறப் பெற்றதாக மாற்றுவார்.

உலக மனிதர்கள் சொல்லுவார்கள் வடக்கு பக்கம் தலை வைத்து படுக்கக் கூடாது என்று. **நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்** என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. உலக மனிதர்கள் சொல்லுகிறபடி நாம் நடப்போமானால் அது வீணான நடத்தையாகும். இத்தனை மணிக்கு தான் திருமணம் நடக்க வேண்டும், இந்த கிழமையில் நடக்க வேண்டும், இப்படித்தான் செய்ய வேண்டும், இதுதான் முறை என்று உலகத்தினர் சொல்லுவார்கள், ஆனால் வேதம் நமக்கு என்ன சொல்லுகிறது என்று நாம் பார்த்து அதன்படி நடக்க வேண்டும். தண்ணீரின் மேல் உன் ஆகாரத்தைப் போடு அநேக நாட்களுக்குப் பின் அதன் பலனை காண்பாய் என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கட்டுப்பாடு உண்டு, எங்கள் குலபழக்கம், எங்கள் குலபெயர் என்று சொல்லிக் கொண்டு மனிதர்கள் நடக்கிறார்கள். இந்த பழக்க வழக்கங்கள் ஒரு மனிதனையும் இரட்சிப்புக்குள் நடத்தாது. இவை தான் வீணான நடத்தை. இந்த உலகத்தில் நாம் எதைச் சொன்னாலும், செய்தாலும் அதன் மூலம் பிதாவாகிய தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும். இதுவரைக்கும் உங்கள் வாழ்க்கை சீரோவாக இருந்தாலும் இனிமேல் உங்கள் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாற வேண்டும் என்பதற்காகத் தான் இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு இறங்கி வந்தார்.

நீங்கள் பேசுகின்ற பேச்சு காற்றோடு போய் விடக்கூடாது. நீங்கள் செய்கிற ஜெபம் உங்கள் மடிக்கு திரும்பி விடக்கூடாது. எலியா நம்மைப் போல பாடுள்ள மனிதனாக இருந்தும் மூன்று வருஷமும் ஆறு மாதமும் மழை பெய்யாதபடிக்கு கருத்தாய் ஜெபம் பண்ணினான். இன்றைக்கு ஜெபத்திற்கான திறவுகோல் உங்களுடைய கையில் இருக்கிறது. நீங்களோவென்றால் அவர் அப்படி சொன்னார், இவர்கள் இப்படி சொன்னார்கள் என்று சொல்லி வீணான காரியங்களைச் சிந்தித்து யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். நாம் இயேசுவைப் பற்றி சொல்ல வேண்டும், சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாக திருவசனத்தைப் பிரசங்கம் பண்ண வேண்டும் என்று வேதத்தில் சொல்லப் பட்டுள்ளது. இயேசுவின் பாதத்தில் ஒரு பெண் தைலத்தை ஊற்றினாள், அதற்கு யூதாஸ் இந்த தைலத்தை உடைத்து ஏன் வீணாக்குகிறீர்கள் என்னிடத்தில் கொடுத்தால் நான் அதை 300 பணத்துக்கு விற்றிருப்பேன். இந்த வீண் செலவு எதற்கு என்று கேட்டான். அவனுக்குள் ஒரு எரிச்சல், பற்கடிப்பு இருந்தது. இந்த தைலம் வீணாகப் போகிறதே என்று. இப்படி சில பாரம்பரியங்கள் நமக்குள்ளும் இருக்கிறது. வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே நல்லது. நாம் இந்த உலகத்தில் எதை செய்தாலும் அதில் கர்த்தருடைய நாமம் மகிமை அடைய வேண்டும்.

## வீணான நடத்தை

பேதுரு சொல்லுகிறார் 1 பேதுரு 1:18-ல் **உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப் படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே** என்று. உங்கள் முன்னோர்களால் நீங்கள் பரம்பரை பரம்பரையாக அனுசரித்து வந்த வீணான நடத்தை என்று சொல்லுகிறார். இந்த வீணான நடத்தையினின்று நீங்கள் மீட்கப்படும்படியாக உங்களுக்காக கொடுக்கப்பட்ட விலை இயேசுகிறிஸ்துவின் இரத்தம். அந்த இரத்தம் இந்த பூமியில் நீங்கள் வாழும் படியாக உங்கள் வாழ்க்கையை பொன்னாக மாற்றி இருக்கிறது. மண்ணாக இருந்த உங்களை பொன்னாக மாற்றி இருக்கிறது. யோபு 23:10-ல் **ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்** என்று யோபு சொல்லி இருக்கிறார். இனி உங்கள் வாழ்க்கை ஒரு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். நீங்கள் உட்கார்ந்தாலும்,

எழுந்திருந்தாலும், எதைப் பேசினாலும் எல்லாம் ஒரு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். நீங்கள் பேசினால் அந்த பேச்சின் மூலம் அநேகர் இரட்சிக்கப்பட வேண்டும். பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் கர்த்தருக்குள் உங்கள் பிரயாசங்கள் விருதாவாக போகாது என்று. ஆகவே நாம் தேவனுடைய கிருபையில் பெருக வேண்டும். இன்றைக்கு வீணான நடத்தையிலிருந்து தேவன் உங்களை வெளியே கொண்டு வருகிறார். வீணான மனுஷனே என்ற பெயர் எடுக்கப்பட்டு இனி நீங்கள் கர்த்தருடையவன்(ள்), கர்த்தருடைய மனுஷன் என்று உங்களுக்குப் பெயர் வைக்கப்படும். இனி இந்த உலகத்தில் நீங்கள் எதை செய்தாலும் அதன் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமை அடைய வேண்டும்.

**ஏசா 43:21-ல் இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்.** என்று வாசிக்கின்றோம். நாம் தேவனுடைய மகிமையை பரப்பும்படியாக உண்டாக்கப்பட்டவர்கள். நம் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் விளியேறப் பெற்றது. இந்த நாளும் நேரமும் இனி திரும்ப வராது. இது கிருபையின் நாள், இரட்சிப்பின் நாள். யோனா சொல்லுகிறார் மீனின் வயிற்றிலிருந்து ஆண்டவரே நீர் எனக்கு கொடுத்த காலத்தையும் நேரத்தையும் நான் வீணாக்கி விட்டேன். கடல்பாசி என்னை மூடிக்கொண்டு இருக்கிறது என்று சொல்லுகிறார். **யோனா 2:8-ல் பொய்யான மாயையைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வரும் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்** என்று தன் நிலையைக் குறித்து சொல்லுகிறார். **அப் 17:5 சொல்லுகிறது விசுவாசியாத யூதர்கள் வைராக்கியங்கொண்டு வீணராகிய சில பொல்லாதவர்களைச் சேர்த்துக்கொண்டு கூட்டங்கூடி, பட்டணத்தில் அமளியுண்டாக்கி, யாசோனுடைய வீட்டை வளைந்துகொண்டு, அவர்களைப் பட்டணத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டுவர வகைதேடினார்கள்.** வீணராகிய மனுஷர் என்று சொல்லப்பட்டுள்ளது. **எரே 2:5-ல் என்னைவிட்டுத் தூரப்பட்டு, மாயையைப் பின்பற்றி, வீணராய்ப் போகிறதற்கு என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டார்கள்? யோபு 21:34-ல் நீங்கள் வீணான ஆறுதலை எனக்குச் சொல்லுகிறது என்ன? உங்கள் மறுமொழிகளில் உண்மைக்கேடு இருக்கிறது என்றான்.** அழுகிறவர்களுடன் நாம் அழ வேண்டும். சிரிக்கிறவர்களோடு சிரிக்க வேண்டும். நாம் மற்றவர்களை ஆறுதல் படுத்துகிறவர்களாக தான் இருக்க வேண்டும். யோபு சொல்லுகிறார் நானே நொந்து நூலாய் இருக்கிறேன் என்று. அவரது நண்பர்கள் அவரை ஆறுதல் படுத்துகின்ற வார்த்தைகளைச் சொல்லாமல் மேலும் அவரைக் காயப்படுகின்ற வார்த்தைகளை சொல்லுகிறார்கள். அப்படி நாம் இருக்கக் கூடாது.

இன்றைக்கு இந்த உலகத்தில் நாம் பண்ணுகிற ஜெபம், நாம் செய்கிற ஊழியங்கள், நம் கையில் தேவன் கொடுத்த வார்த்தைகள், நாம் படுகின்ற பிரயாசங்கள் எல்லாம் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். என்றென்றைக்கும், அடுத்த தலைமுறையில் அதைக் குறித்து பேசப்படுகிறதாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நாம் மார்த்தாளைப் போல அநேக காரியங்களை நினைத்து கவலைப் படுகிறவர்களாய் மாறி விடுவோம். ஆனால் இன்றைக்கு மார்த்தாள்களாக இருக்கிற உங்களை மரியாள்களாக மாற்றத்தான் தேவன் விரும்புகிறார். உங்கள் வாழ்க்கையில் தேவையானது ஒன்றே, தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை, கிருபையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் உங்களுக்கு தேவை. இதுவரை நீங்கள் எப்படி வாழ்ந்திருந்தாலும் சரி, உங்கள் வாழ்க்கை வீணாக போயிருந்தாலும் சரி, இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கின்ற உங்கள் வாழ்க்கையை தேவன் அர்த்தமுள்ளதாக, விலையேறப் பெற்றதாக மாற்றுகிறார். எந்த இடத்தில் நீங்கள் தொலைந்து போனீர்களோ, எந்த இடத்தில் கிருபையை போக்கடித்தீர்களோ, எந்த இடத்தில் தலை குனிந்தீர்களோ அதே இடத்தில் தேவன் உங்களை ஆசீர்வதித்து உயர்த்த போகிறார். எவரையும் மேன்மைப்படுத்தவும், பலப்படுத்தவும் அவராலே ஆகும். நம்முடைய நினைவுகள் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். ஆண்டவர் நினைப்பதை நாம் நினைக்க வேண்டும். நாமாகவே ஒன்றை யோசித்து, நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. என் பிள்ளைக்கு திருமணமாகவில்லையே, குழந்தை பாக்கியமில்லையே நான் என்ன செய்யப் போகிறேன், என் குடும்பத்தை எப்படி நடத்தப் போகிறேன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், அவை எல்லாவற்றையும் தேவன் இடத்தில் சொல்லி விடுங்கள், அவர் பார்த்துக் கொள்வார். பரத்திலிருந்து தேவன் பதிலை உங்களுக்குத்தரப் போகிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே வீணான நடத்தைகளிலிருந்து உங்கள் வாழ்க்கையை மாற்றி, அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ விலையேறப் பெற்ற வாழ்க்கை வாழ கிருபை தருவாராக ஆமென்.



பெண்கள் பகுதி

# கர்த்தரை நினையாமற்போனோம்

சகோதரி.
கலா வின்சென்ட்ராஜ்



அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார், அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம், அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார், அவரை எண்ணாமற்போனோம். ஏசாயா 53:3

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

நாம் வாழும் இந்த உலகத்தில் பெற்றோரை பிள்ளைகள் நினையாமல் மறந்து போகிறதை பார்க்கிறோம். பிள்ளைகளையும் பெற்றோர் கைவிடுகிறதையும், மறந்து போகிறதையும் பார்க்கிறோம். நம்மிடம் நன்மை பெற்றவர்கள் அதைப்பற்றின ஒரு நன்றியுணர்வு கூட இல்லாமல் நடந்து கொள்ளும் போது, சில வேளை எதிராய் செயல்படும் போது உள்ளம் உடைந்து போகிறோம். அதைப் போலவே நம் ஆண்டவர் இயேசுவைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி சொல்லும் போது நாம் எப்படி அவரிடம் நடந்து கொள்கிறோம் என்பதைக் சொல்லுகிறார். நம்முடைய முகங்களை அவரை விட்டு மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமற் போனோம். ஐயோ! அவரை நாம் மறந்து போனோம். ஆண்டவர் எவ்வளவு உள்ளம் உடைந்திருப்பார் பாருங்கள். இன்றைக்கு நாம் மறந்த காரியங்களை நினைவு கூர்ந்து ஆண்டவரிடம் நம்மை அர்ப்பணிப்போமா?

> அவனது ஞாபகத்தில் தகப்பன் வீடு வந்தது. தன் நிலையை உணர்ந்து தாங்கித்தரியாமல், தாமதிக்காமல் எழுந்து தகப்பன் வீட்டிற்கு வந்தான்.

## தகப்பன் வீட்டை நினைக்க வேண்டும்

பட்டயத்துக்குத் தப்பினவர்களே தங்கித் தரியாமல் நடந்து வாருங்கள், தூரத்திலே கர்த்தரை நினையுங்கள், எருசலேம் உங்கள் ஞாபகத்தில் வரக்கடவது. எரேமியா 51:50

யாரை விழுங்கலாம், யாரை ஆண்டவரை விட்டு பிரிக்கலாம், யாரை பாவத்தில் விழப்பண்ணலாம் என்று பொல்லாத பிசாசு வகைதேடி சுற்றித் திரிகிறான். அவனுடைய பட்டயத்திற்கு அநேகர் இரையாகிப் போனார்கள். பலவிதமான போராட்டங்களை சந்தித்து தேவனை விட்டு தூரமாய் போய் விட்டார்கள். இளையமகன் உவமையில் தகப்பனிடம் சொத்தைப் பிரித்துக் கேட்டு வாங்கி சென்று நண்பர்களோடு உல்லாசமாய், ஊதாரியாய் சுற்றும்படி அவன் தூரதேசத்திற்குப் போய் விட்டான். பிசாசு விரித்தக் கண்ணி தகப்பனை விட்டு அவனை தூரமாய் பிரிப்பதுதான். தகப்பனை விட்டு அவனைப் பிரித்து, தன் இஷ்டம் போல அலைய விட்டு, தன்னுடைய ஆட்களில் ஒருவனாக அவனை மாற்றி விட்டான். அதன் பின்பு தகப்பனைப் பற்றின எண்ணமே அவன் மனதிற்குள் வரக்கூடாதபடி செய்தான். அதன் விளைவு எல்லாம் இழந்து குறைவுபடத் தொடங்கினான். ஒருவேளை உணவைத் தரக்கூட ஒருவரும் அவனுக்கு இல்லை. உபா 32:18-ல் உன்னை ஜெனிப்பித்த கன்மலையை நீ நினையாமற்போனாய், உன்னைப் பெற்ற தேவனை மறந்தாய் என்று ஆண்டவர் சொல்லுகிறார். இந்த வாலிபன்

தகப்பனை மறந்து தூரத்தில் நின்றான். புத்தி தெளிந்த போது அவனது ஞாபகத்தில் தகப்பன் வீடு வந்தது. தகப்பன் வீட்டிலிருக்கும் வேலைக் காரர்களுக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறதே நான் பட்டினியாய் இருக்கிறேனே என்று. தன் நிலையை உணர்ந்து தங்கித்தரியாமல். தாமதிக்காமல் எழுந்து தகப்பன் வீட்டிற்கு நடந்து வந்தான். தேவன் அவனை கைவிடவில்லை. அந்த அன்பு நிறைந்த தகப்பன் அவன் குறைவுகளை மன்னித்து சேர்த்துக் கொண்டார். உங்கள் ஞாபகத்திலும் தகப்பன் வீடு வரட்டும். காலம் தாமதிக்காமல். தங்கிதரித்து நிற்காமல். உடனே எழும்பி தகப்பனிடம் வாருங்கள். இயேசு தகப்பன் உங்களை ஏற்றுக் கொள்ள இன்னும் ஆவலோடிருக்கிறார்.

## அவருடைய வார்த்தைகளை நினைக்க வேண்டும்

மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். லூக் 24:27



அந்நேரமே எழுந்திருந்து எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள் என்று 33-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆண்டவருடைய சீஷர்களில் இரண்டு பேர் எருசலேமிலிருந்து ஏழு அல்லது எட்டு மைல் தூரமாய் இருக்கிற எம்மாவு என்ற ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாய் எருசலேமை விட்டு தேவ சமூகத்தை விட்டு. தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்க முடியாமல் மந்த இருதயத்தோடு போய்க் கொண்டு இருந்தார்கள். ஓசியா 4:6-ல் என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள். நீ அறிவை வெறுத்தாய். ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்: நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய். ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன். என்று ஆண்டவர் சொல்லியிருந்தாலும். சீஷர்களோடு சேர்ந்து நடந்தார். அவர்களை விட்டு விடவில்லை. வேதவாக்கியங்களை மறந்து. அதை விசுவாசிக்க முடியாமல் மந்த நிலையில் போய்க் கொண்டிருக்கிற அவர்களுக்கு தேவனுடைய வார்த்தைகளை ஞாபகம் மூட்டி திரும்ப எருசலேமுக்கு வரச் செய்த ஆண்டவர்

இன்றைக்கு உங்கள் வாழ்விலும் வேதத்தை மறந்து. அதை விசுவாசிக்க முடியாமல் மந்த நிலைமையில் போய்க் கொண்டிருக்கிற உங்களை இந்த செய்தியின் வழியாய் இயேசு சந்தித்து உங்களோடு பேசுகிறார். நீங்கள் அவரை மறந்திருந்தாலும். அவரை விசுவாசிக்க முடியாத மந்த இருதயத்தோடு இருந்தாலும். அவர் உங்களைக் கைவிடுவதில்லை. உயிர்த் தெழுந்த இயேசு அன்றைய தினமே மற்ற சீஷர்களை சந்திப்பதற்கு முன்பாக தன்னை மறந்து தூரம் போய்க் கொண்டிருந்த இந்த இரண்டு சீஷரோடு தானும் சேர்ந்து நடக்கலானார் என்று அந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. நீங்கள் மனம் கலங்கா திருங்கள். நீங்கள் நினையாமல் போயிருந் தாலும். ஆண்டவர் உங்களையும். உங்கள் பிள்ளைகளையும் மறக்கவில்லை. உங்கள் நினைவாக. உங்களோடு தான் இருக்கிறார். நீங்களும் அவருடைய வேதத்தை. வார்த்தையை விசுவாசித்து. கைக்கொண்டு நடக்க உங்களை ஒப்புக்கொடுங்கள்.

## அவர் செய்த நன்மைகளை நினைக்க வேண்டும்

என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. சங் 103:2. அவருடைய செயல்களையும் அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள். சங் 78:11

நாம் சீக்கிரத்தில் தேவன் செய்த. மற்ற மனிதர்கள் நமக்குச் செய்த நன்மைகளை மறந்து போகிறவர்களாக இருக்கிறோம்.

அதனால் தான் ஆண்டவர் மறவாதே என்கிறார்.
சங் 106:13 சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான்.
சங் 137:5,6 எருசலேமே நான் உன்னை மறந்தால் என் வலதுகை தன் தொழிலை மறப்பதாக. நான் உன்னை நினையாமலும் எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியிலும் அதிகமாக எண்ணாமலும் போனால் என் நாவு மேல் வாயோடு ஒட்டிக்கொள்வதாக என்று இந்த சங்கீதக்காரன் சொல்கிறான்.



ஏன் இன்று நம்மால் துதிக்க முடியவில்லை. எந்த வேலையை செய்தாலும் ஒரு குழப்பம். என்ன முடிவு எடுப்பது. என்ன செய்தால் நல்லது. ஏன் இந்த நிலை திடீரென்று செய்ய வேண்டியவை கூட மறந்து போகிறது. சிலர் பேசிக் கொண்டிருக்கும் போது கூட இப்ப நான் என்ன பேசினேன். அதற்குள் மறந்து விட்டேன் என்பார்கள். ஏன் இந்த குழப்பம்? தேவனை மறந்தால் தான். அவரை நினையாமல் போனதால் தான். நாம் துதிக்க முடியாதபடி நாவு மேல் வாயோடு ஒட்டிக் கொண்டு ஊமையாகி விட்டது. செய்ய வேண்டிய நல்ல கிரியைகள் மறந்து போகின்றது. அவர் உங்களுடைய இந்த அக்கிர மத்தை மன்னிக்கிறவர். உங்களுடைய நோய்களை குணமாக்குகிறவர். உங்கள் பிராணனை அழிவுக்கு விலக்கி விடுவிக்கிறவர். உங்கள் வயது திரும்ப வாலவயது போல ஆகும்படி செய்கிறவர். நீங்கள் பூர்வ நாட்களில் இருந்தது போல இருக்கச் செய்வார்

ஓசியா 2:13,14,15-ன்படி அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி, தன் நெற்றிப் பட்டங்களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு, தன் நேசரைப் பின்தொடர்ந்து, என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆயினும், இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துக்கொண்டுபோய், அவளோடே பட்சமாய்ப் பேசி, அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத் தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினதுபோல் பாடுவாள் என்று சொல்லப் பட்டுள்ள வார்த்தையின்படி அவர் நம்மோடு பட்சமாய் பேசி திரும்பவும் நாம் வாய் திறந்து பாடவும்,, அவரை துதிக்கவும், நம்மை நன்மையால் நிரப்பவும் ஆவலோடு இருக்கிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே அவரை நினையாமற்போன, மறந்துபோன நம்மை மன்னித்து மறுபடியும் அவருடைய அன்பினால் நிரப்பி, அவருடைய பிள்ளையாக, சாட்சியாக வாழ கிருபை தருவாராக. ஆமென்

24 மணி நேர
ஜெப உதவிக்கு
94428 00449
94428 00447
94980 00449

# எழுப்புதல் உபவாச ஜெபம்




### மார்ச் 15-ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற எழுப்புதல் உபவாச ஜெபம்



தேவனுடைய பெரிதான கிருபையினால் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமையில் மதுரை மக்களின் ஆசீர்வாதத்திற்காக, இரட்சிப்பிற்காக இக்கூட்டம் நடத்தப்பட்டுகின்றது. மார்ச் 15 ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்திற்கு தேவன் திரளான மக்களை கூட்டிச் சேர்த்தார். நம் சகோதரி கலா வின்சென்ட்ராஜ் அவர்கள் பாடல் ஆராதனையை நடத்தி, ஜனங்களை தேவபிரசன்னத்திற்குள் அழைத்துச் சென்றார்கள்.

அநேகருடைய வாழ்க்கையில் இருந்த பாரங்கள், வேதனைகள் மாறினது. நம் சகோதரர். வின்சென்ட்ராஜ் நமக்காக வேண்டிக் கொள்கின்ற, நமக்காக பரிதபிக்கின்ற தேவன் என்ற தலைப்பில் தேவ செய்தி கொடுத்து ஜனங்களை கர்த்தருக்குள் விசுவாசத்தில் பெலனடையச் செய்தார்கள். சகோதரர். T. ஸ்டிபன் அவர்கள் நம்மை பராமரித்து, பாதுகாத்து, போஷித்து, ஆசீர்வதித்து நடத்துகின்ற தேவன் என்ற  தலைப்பில் பேசினார்கள். கண்ணீரோடும், வேதனையோடும், கர்த்தருடைய வார்த்தைக்காக ஏங்கி வந்த ஒவ்வொருவரோடும் தேவன் ஊழியர்கள் மூலமாக பேசி அவர்களை ஆற்றி தேற்றி தைரியப்படுத்தி அனுப்பினார். அநேகர் தங்கள் வாழ்க்கையில் உயிர்மீட்சியடைந்தார்கள். தேவனுக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக








# யார் அந்த சிறுவன்

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?

பத்து வயது நிரம்பிய சிறுவன் ஒருவன். விதைவையான தன் தாயாரை விட்டு பிரிந்து தனது அண்ணனுடன் வெகுதூரத்திலுள்ள பள்ளிக்கு படிக்க சென்றான். அங்கு அவன் தாயை விட்டுப் பிரிந்து, துயரத்தில் மூழ்கி இருந்தான். அவனது அண்ணன் அவனை உற்சாகப்படுத்துவதற்காக அருகிலிருந்த கடைதெருவுக்கு கூட்டி சென்றான். அந்த சிறுவன் அழுது கொண்டிருந்தான். அண்ணன் தூரத்தில் வந்து கொண்டிருந்த ஒரு பெரியவரை காண்பித்து, அழாதே! அந்த பெரியவர் உனக்கு ஒரு ரூபாய் காசு கொடுப்பார்" என்று சொன்னான். அது எப்படி உனக்கு தெரியும் என்று அந்த சிறுவன் கேட்டான். இந்த பட்டணத்திற்குள் வரும் ஒவ்வொரு புதிய நபருக்கும் அவர் காசு கொடுப்பார்" என்று அண்ணன் பதில் கூறினான். சிறுவனும் ஆவலோடு அந்த பெரியவர் தனது அருகில் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த வயதானவர் சிறுவனின் அருகில் வந்ததும் அவர் தனது தலையில் இருந்த தொப்பியை எடுத்து விட்டு, சிறுவனை பார்த்து ஊருக்குப் புதிதா என்று கேட்டார். இன்று தான் இங்கே வந்தான் என்று அண்ணன் பரிந்துரைத்தான். சிறுவனும் அவரது சட்டைப் பைக்குள் அவர் கை செல்கிறதா என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான். அந்த முதியவர் சிறுவனிடம் அன்பாக "பரலோகத்தில் நம் தந்தையாம் கடவுள் இருக்கிறார். அவர் நாம் ஒவ்வொருவரும் நடக்க வேண்டிய வழிகளை வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ளார். நாம் அதன்படி செய்யவில்லை என்றால் அவருடைய தண்டனைக்கு ஆளாவோம். நாம் தண்டனைக்கு தப்ப வேண்டுமென்பதற்காக அவர் தமது குமாரனாகிய இயேசுவை இந்த உலகிற்கு அனுப்பினார். நமது பாவங்களுக்கு பரிகாரமாக அவர் சிலுவையில் மரித்தார். இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால் நமது பரம தந்தையாகிய பிதா, நம்முடைய பாவங்களை எல்லாம் மன்னித்து, பரம ராஜ்யத்தில் என்றென்றும் அவரோடு வாழ நம்மை அழைத்து செல்வார்", என்று பொறுமையுடன் விளக்கிக் கூறினார். சிறுவனுக்கு தனது தாயைப் பிரிந்த கவலை எல்லாம் பறந்தோடியது. இயேசுவை தனது தந்தையாக, தனது இரட்சகராக ஏற்றுக் கொண்டான். அந்த முதியவரும் அவனுக்கு ஒரு ரூபாய் காசைக் கொடுத்துச் சென்றார். அப்பொழுது அந்த சிறுவனுக்குள் இருந்த எண்ணமெல்லாம் "நான் ஒரு பெரிய செல்வந்தனாகி விட்டேன். இனிமேல் என் தேவைகளை சந்திக்க இயேசு அப்பா எனக்கு இருக்கின்றார்" என்பதுதான்.

பின்நாட்களில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து தேசத்தில் பெரிய எழுப்புதலுக்கு காரணமாய் இருந்த டி.எல்.மூடி பிரசங்கியார் தான் அந்த சிறுவன். "இன்னும் அந்த முதியவர் பேசிய வார்த்தைகள் என் காதில் தொனித்து கொண்டிருக்கிறது", என்று ஐம்பது வருடம் கழித்து டி.எல்.மூடி ஒரு பிரசங்கத்தில் கூறினார். ஏற்ற நேரத்தில் அந்த சிறுவனுக்கு அந்த முதியவர் கூறிய நற்செய்தி எவ்வளவு பெரிய ஊழியரை உருவாக்கியது பாருங்கள். குட்டீஸ் நீங்களும் இந்த முதியவரைப் போல சரியான நேரத்தில் இயேசப்பாவைப் பற்றி மற்றவர்களுக்கு சொல்லிடுங்க. அப்போ அவர்களும் பயனடைவார்கள், இயேசப்பாவிடம் ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். ok bye குட்டீஸ்

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா என்னுடைய பாவத்திற்கான தண்டனையை நீர் ஏற்றுக் கொண்டு எனக்காக சிலுவையில் மரித்தீரே உமக்கு நன்றி இயேசப்பா. என் பாவங்களையெல்லாம் மன்னித்து, என் உள்ளத்திற்குள் வாங்க இயேசப்பா. உம்மை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன். இனிமேல் உம் பிள்ளையாய் வாழ உதவி செய்யும், காத்துக் கொள்ளும் இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

"ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்".
நீதி 25:11





வாலிபர் பகுதி

# ஒரு யூத விஞ்ஞானியின் மிக சிறந்த கண்டுபிடிப்பு

சகோதரி. பிரேமாடேவிட்

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே! DR.ஜேம்ஸ் டுர் என்ற யூதர் அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கில் பிறந்து வளர்ந்தார். ஆர்கானிக் கெமிஸ்ட்ரியல் படிப்பில் PH.D பட்டம் பெற்று, உலகளவில் மிகச் சிறந்த அறிவாளிகள் 50 பேர்களில் ஒருவராக, பெரிய பல்கலைக்கழகங்களில் பேருரையாற்றும் மிகச் சிறந்த அறிஞராகவும் இருந்தார். இதுவரை 650 புத்தகங்களை எழுதியுள்ளார். மருத்துவம், எலக்ட்ரானிக் கம்ப்யூட்டர், நினைவாற்றல் போன்ற பிரிவில் அநேக கண்டுபிடிப்புகளை உருவாக்கி சாதனை படைத்துள்ளார்.

## மறுபடி பிறத்தல் என்றால் என்ன?

யூதரான இவருக்கு இயேசு வரப்போகிற மேசியா என்று மட்டும் தான் தெரியும். அவரைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள நாட்டமில்லாத வாலிபனாக கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போது சகமாணவர்களில் சிலர் தங்களை 'மறுபடி பிறந்த கிறிஸ்தவர்கள்' (BORN AGAIN CHRISTIANS) என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதப்பட்டனர். இவருக்கோ இது என்ன? புரியாத புதிராக இருக்கே என்று யூத ரபியிடம் சென்று விளக்கம் கேட்டதற்கு, இவரைக் கண்டித்து வெளியே அனுப்பிவிட்டார். அது இவருக்கு துக்கமாக இருந்தது. அந்த சமயத்தில் தான் இவர் முன்பு சந்தித்த மாணவனில் ஒருவனை சந்தித்தார். அப்போது அந்த மாணவன் ஒரு படத்தை வரைந்து இவருக்கு விளக்கம் கூறினான். உயர்ந்த செங்குத்தான பாறையின் உச்சியின் ஒரு பகுதியில் ஒரு மனிதன் நின்று கொண்டிருப்பது போலவும், மற்றொரு பாறையில் ஆண்டவர் நின்று கொண்டிருப்பது போலவும் வரைந்தான். இரண்டு பாறைகளுக்கு இடையே ஒரு பெரும் இடைவெளியும், அதன் கீழே ஒரு பெரும் ஆழமான பள்ளமும் இருப்பது போலவும் வரைந்து, அந்த இடைவெளிக்கு பாவம் என்று எழுதினான். மனிதனும் ஆண்டவரும் ஒன்று சேர விடாமல் பாவமே தடையாக இருக்கிறது என்று அவன் சொல்ல வருவதை இவர் புரிந்து கொண்டார். ஆனால் நான் ஒரு பாவி அல்ல, யாரையும் கொலை செய்யவில்லை, கொள்ளையடிக்கவில்லை நான் எப்படி பாவியாக இருக்க முடியும் என்று இவர் அவனிடத்தில் கேட்டார்.

## பாவத்தை உணர்த்தும் வல்லமையுள்ள வார்த்தை

யூதர்கள் 'பாவம்' என்பதைப் பற்றி ஜெப ஆலயத்திலும், வீட்டிலும் கூட பேசுவதே இல்லை. 'எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர் களானார்கள்', ரோமர் 3:23, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று மத் 5:28. இதை கேட்ட மாத்திரத்தில் அவரது நெஞ்சில் யாரோ பலமாக குத்தியத்தைப் போன்ற வேதனையை உணர்ந்தார். ஏனென்றால் கல்லூரியில் யாருக்கும் தெரியாமல் ஆபாச படங்கள் (PORNOGRAPHY) அடங்கிய புத்தகங்கள், மாதந்திர பத்திரிகைகளை தவறாமல் வாங்கி படிப்பது இவரது பழக்கமாயிருந்தது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒருவர் சொன்ன காரியம் வேதத்தில் எழுதப்பட்டு, அதை நான் கேட்ட உடனே என்னை உணர்த்தி, எனது கெட்டப் பழக்கத் திலிருந்து வெளியே வர, என்னை குத்துகிறது என்றால் அது எவ்வளவு வல்லமையுள்ள வார்த்தை 'நான் பாவி' என்பதை உணர்த்திய இயேசுவே என் பாவத்திற்காகப்

பலியானவர். ஏசாயா 53-ம் அதிகாரத்தில் வாசிக்கிறபடி என்னுடைய பாடுகளை, துக்கங்களை சுமந்தவர். எனக்காக இரத்தம் சிந்தி ஜீவனைக் கொடுத்தவர் என்பதைக் கண்டு கொண்டார். இயேசுவை தன் வாழ்க்கையில் கண்டார். பாவ மன்னிப்பை பெற்றார்.

தனது அறைக்குச் சென்று ஆண்டவரே நான் ஒரு பாவி இயேசுவே என் பாவத்தை மன்னியும், எனக்குள் நீர் வாரும் என்று இவர் ஜெபித்து கொண்டிருக்கும் போதே யாரோ ஒருவர் இவர் அறைக்குள் வருவதை உணர்ந்தார். முழங்காலில் நின்று கொண்டிருந்த இவர் கண்ணை திறந்து பார்த்தால் இவரது பாவங்களுக்காக ஜீவன் கொடுத்த இயேசு நின்றிருப்பதை கண்டார். இவருடைய அறையிலே இயேசுவைக் கண்டது இவருக்கு மகிமையாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. அவரைக் கண்டதும் அழ ஆரம்பித்தாலும் இனம் புரியாத ஒரு சந்தோஷம், இதை எல்லாரிடமும் சொல்ல வேண்டும் என்ற ஒரு அவசர உணர்வு ஏற்பட்டது.

தன்னுடைய ஒன்று விட்ட சகோதரிகளிடம் இவர் இயேசுவைக் கண்டது பற்றி சொன்னவுடன், உன்னால் இதை எப்படி ஏற்றுக் கொள்ள முடிகிறது, நாம் யூதர்கள் அல்லவா? என்று கடிந்து கொண்டார்கள். என் பாவம் மன்னிக்கப்பட்டது என்பதில் அவர்கள் சந்தோஷப்படாமல் திட்டுகிறார்களே, அப்படியா னால் நான் பாவத்திலே வாழ்வது அவர்களுக்கு தவறாய் தெரியவில்லையே என்று நினைத்தார். இவருடைய அம்மாவிடம் சொன்னவுடன் என்ன சொல்வதென்று தெரியாமல் அடிக்க ஆரம்பித்து விட்டார்கள். அப்பாவிடம் சொன்னவுடன் அவர் திகைத்துப் போய் பேசவே இல்லை. 30 வயதான வாலிபன் இயேசு, எப்படி நம்முடைய முன்னோர்களாகிய மதத்தலைவர்களை குறை கூறலாம். அவர்களை வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறை என்று எப்படி கூறலாம். அவரைக் கொன்றதுக்கு, அவர்களை குற்றம் சொல்ல மாட்டேன் என்று சொன்ன இவருடைய அம்மா பழைய ஏற்பாட்டை நன்கு படித்தவர்கள். இப்போது புதிய ஏற்பாட்டையும் படித்துள்ளார்கள். அதன் பின்பு தன் மகனுக்கு போன் செய்தார்கள். 72 வயதான நான் பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் திரும்பத் திரும்ப படித்தேன். இயேசு கிறிஸ்து தனது ஜீவனையே தியாகமாய் தந்தது என்னைத் தொட்டது. இப்பொழுது நான் இயேசுவை நம்புகிறேன். இயேசுவே தேவனுடைய குமாரன் என்றார்கள். நான் என் வாழ்க்கையில் மிகச் சிறந்த கண்டுபிடிப்பை செய்திருக்கிறேன் என்று நினைத்தேன். ஆனால் அதே அனுபவத்தை என் அம்மாவும் கண்டு கொண்டார்கள் என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்தது என்றார்.

## மதமாற்றமல்ல மனமாற்றமே

நான் பெற்ற இந்த பாவ மன்னிப்பு, இரட்சிப்பின் அனுபவம் மதமாற்றமல்ல மனமாற்றமே என்கிறார் இந்த விஞ்ஞானி. இயேசுவின் சீஷர்கள் எல்லாரும் யூதர்கள் தான். அவர்கள் எல்லோரும் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டு பாவத்திலிருந்து மனம் திரும்பவே சொன்னார்கள். எதிரியாக இருந்த பவுலும் இந்த அனுபவத்தைப் பெற்ற போது இது புதிய மதம் அல்ல, இது வாழ்விற்கான வழி என்ற சொன்னார். வேதத்தை தொடர்ந்து வாசித்து, தியானித்து, அறிந்த சத்தியத்தை அடக்கி வைக்காமல் எல்லோருக்கும் குறிப்பாக கல்லூரிகளிலும் அறிவித்து வருகிறார். குடும்பமாக இயேசுவுக்காக வாழ்ந்து ஊழியம் செய்கிறார்.

இதை வாசிக்கின்ற நீங்கள் கிறிஸ்தவராக அல்லது கிறிஸ்தவர் அல்லாதவராக இருக்கலாம். ஆனால் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் 'பாவம்' இருந்தால் அது உங்களை ஆண்டவரை விட்டு பிரித்து வைக்கும். எனவே மிகப் பெரிய விஞ்ஞானி கண்டுபிடித்த கண்டுபிடிப்பைப்போல நீங்களும் இயேசுவே என் பாவத்தை மன்னியும். உங்க இரத்தத்தால் என்னை கழுவும். என் வாழ்க்கையை உம் கையில் கொடுக்கிறேன். உம்மை என் சொந்த இரட்சகராக ஏற்று கொள்ளுகிறேன் என்று சொல்லுங்கள். இந்த நிமிடமே உங்கள் உள்ளத்தில் பாவமன்னிப்பின் நிச்சயமும், சந்தோஷமும் உண்டாகும். அவருடைய இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. உங்கள் பாவத்திற்க்காக மரித்த இயேசு, நீங்கள் நீதிமானாய் வாழ உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறார். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து தாமே உங்களை இரட்சித்து, ஆசீர்வதித்து வழிநடத்துவராக.

## சாட்சி பகுதி



# சமாதானத்தினால் நிரப்புகிறவர்

**சகோதரி. சுசிலா – மதுரை**

மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்திற்கு நான் கடந்த ஒரு சில மாதங்களாகத்தான் வருகிறேன். நான் ஜெபத்திற்க வரும்போதே மிகுந்த மனவேதனையோடும், கண்ணீரோடும் தான் வந்தேன். கடந்த 10 ஆண்டுகளாக என் மகன் குடும்பத்ததில் பல பிரச்சனைகள், குடும்பம் பிரிந்து தான் இருந்தது. முதன்முறையாக ஜெபத்திற்க வந்து சகோதரர் மற்றும் சகோதரியிடம் என் மகன் குடும்பத்திற்காக ஜெபித்தேன், தேவன் அற்புதம் செய்வார் என்ற நம்பிக்கையோடு சென்றேன். அதே போல் தேவன் அற்புதம் செய்தார் என் மகன் குடும்பம் ஒன்று சேர தேவன் கிருபை செய்தார். மற்றும் என் காலில் அடிபட்டு, என்னால் நடக்க முடியவில்லை, மருத்துவர் எக்ஸ்ரே எடுக்கச் சொன்னார், நான் இயேசப்பாவிடம் மூன்றாவது சனிக்கிழமை எழுப்புதல் உபவாச ஜெபத்திற்கு செல்ல வேண்டும் எனக்கு சுகம் தாங்க என்று சொல்லி ஜெபித்தேன். தேவன் எனக்கு மூன்று நாளில் நல்ல சுகத்தை தந்து ஜெபத்திதில் கலந்து கொள்ள கிருபை செய்தார். தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜெபித்த உங்களுக்கு நன்றி.

**சகோதரி. பிளஸ்ஸி - தூத்துக்குடி**

நான் அனுதினமும் இயேசுவை தினம் பார்ப்போம் என்ற நிகழ்ச்சியை **Youtube**-ல் பார்ப்பேன். மிகுந்த வேதனையோடும், கண்ணீரோடும், நான் சமாதானமில்லாமல் இருந்த சமயத்தில் கடந்த மாதத்தில் சனிக்கிழமை காலையில் ஒளிபரப்பான இயேசுவை தினம் பார்ப்போம் என்ற நிகழ்ச்சியில் சகோதரி கலா வின்சென்ட்ராஜ் அவர்கள் எரேமியா 30:17-ல் சொல்லப்பட்ட **உன் காயங்களை ஆற்றுவேன்** என்று தேவவார்த்தையைப் பேசினார்கள். அந்த வார்த்தை என் உள்ளத்தில் கிரியை செய்தது. அப்பொழுதே எனக்குள் நான் சமாதானத்தை உணர்ந்தேன்.
இப்பொழுது என் வாழ்க்கையில் கண்ணீர், வேதனை இல்லை. சந்தோஷமாக இருக்கிறேன். கண்ணீரை மாற்றின தேவனுக்கு கோடான கோடி நன்றி.

**சகோதரி. ஷீனா - நாகர்கோயில்**

நானும் என் அம்மாவும் இயேசுவை தினம் பார்க்கிறேன் என்ற பத்திரிக்கையை வாசிப்போம். இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் **Youtube** நிகழ்ச்சிகளையும் பார்ப்போம். எனக்கு வயது 27 இன்னும் திருமணம் ஆகவில்லை என்று கவலையாக, குடும்பத்தில் அனைவரும் வேதனையோடு இருந்தோம். எனது அம்மா இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கு என் திருமண காரியத்திற்காக ஜெபிக்கச் சொல்லி கடிதம் எழுதினார்கள். சகோதரரும், சகோதரி அவர்களும் ஜெபித்து மூன்று மாதத்திற்குள் திருமணம் நடக்கும் என்று பதில் கடிதம் எழுதினார்கள். அதே போல் கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு எனக்கு மூன்று மாதத்திற்குள் திருமணம் நிச்சயிக்கப்பட்டு, திருமணம் தடை இல்லாமல் நடக்க கர்த்தர் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில்தமதுபிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O)

இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர்,
ஏ – காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது **GOOGLE PAY** மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை **944 2800 449** என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு **WHATSAPP** மூலமாகவோ, **accounts@jesuslives.in** மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

நடப்பு செய்தி

# புத்தொழில் நிறுவனங்களின் மையமாக மாறும் புதிய இந்தியா



கடந்த 2014 ஆம் ஆண்டு நாட்டின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்ட போது, பல்வேறு புதிய வார்த்தைகள் முதன் முறையாகக் கேட்கப் படத் தொடங்கின! அது போன்ற ஒரு வார்த்தை தான், ஸ்டார்ட்அப் (புத்தொழில் நிறுவனம்) எனினும் முக்கியத்துவம் அளித்து இளைஞர்களின் கனவுகளுக்கு உயிரூட்டுவதில் நம்பிக்கை கொண்டுள்ள மத்திய அரசின் முயற்சிகளால், ஒன்று புள்ளி ஐந்து லட்சத்திற்கும் அதிகமான புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதிகமான புத்தொழில் நிறுவனங்களுடன், இந்தியா தற்போது உலக அளவில் மூன்றாவது வலிமையான புத்தொழில் சூழலாக விளங்குகிறது. புத்தொழில் இந்தியா முன்முயற்சியின் வாயிலாக இது சாத்தியமாகி உள்ளது. இந்தியாவின் நம்பிக்கைகளுக்கு புத்துயிர் ஊட்டும் பிரதமர் நரேந்திர மோடியின் இந்த முன்முயற்சி, ஜனவரி 16 அன்று வெற்றிகரமாக 9 ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

இந்தியா மக்கள் தொகையில் 65% இளைஞர்களின், சராசரியாக 35 வயது உடையவர்களையும் கொண்டுள்ள ஒரு இளைய நாடு. இந்த இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்ற சரியான பாதையை காட்டுவதற்கான தேவை எழுந்தது. ஆகஸ்ட் 15, 2015 அன்று செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து பிரதமர் நரேந்திர மோடி புத்தொழில் இந்தியா முன்முயற்சியை அறிவித்த போது இந்த எண்ணத்திற்கான பாதை உருவாக்கப் பட்டது.



அந்த ஐந்து மாதங்களுக்கு பிறகு, ஜனவரி 16, 2016 அன்று இந்த திட்டம் முறையாக தொடங்கி வைக்கப்பட்ட போது, ஏதேனும் ஒரு செயலை செய்ய விரும்புவோருக்கு பணம் ஒரு பொருட்டாக இருப்பதில்லை. ஒரு செயலை செய்பவர், தடைகள் தங்களை அண்டவிடுவதில்லை. என்ன நடக்கும் என்பதை அவரால் மட்டுமே காண முடியும். நாட்டின் இளைஞர்கள் வேலை வழங்குபவர்களாக இருக்கவேண்டுமே அன்றி, வேலை தேடுபவர்களாக இருக்க கூடாது என்பதே எனது கனவு, என்று பிரதமர் கூறினார். இன்று சுமார் 1.5 லட்சம் புத்தொழில் நிறுவனங்களும், ஏறத்தாழ 118 யூனிகார்ன் (அதிக முதலீடு கொண்ட நிறுவனம்) நிறுவனங்களும் புத்தொழில் இந்தியா முன்முயற்சியின் வெற்றிக் கதையைப் பறைசாற்றுகின்றன. எளிதாக சொல்ல வேண்டுமானால், புத்தொழில் என்பது, புத்தாக்கத்தின் வாயிலாக அன்றாட பிரச்சனைகளுக்குத் தீர்வு காணக்கூடிய புதிய நிறுவனங்களைத் தொடங்குவது என்பது பொருள். அத்தகைய நிறுவனங்கள், இளம் தொழில் முனைவோரால் தனியாகவோ அல்லது இணைந்தோ தொடங்கப்படுகிறது.

நன்றி : நியூ இந்தியா

சமாச்சார்


ஏப்ரல்
20
தாராபுரத்தில்
ஈஸ்டர் ஆசீர்வாத
பெருவிழா
ஞாயிறு
5:00 PM- 9:00 PM
இடம்:
சிவரஞ்சனி மஹால், உடுமலை ரோடு, தாராபுரம்
தொடர்புக்கு :94428 00449, 88835 72457


LIVE
புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
நம்பிக்கையின்
இரவு
ஏப்ரல்
30
இ ர வு
10:30 PM - 12:30 AM
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது.
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள் உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய தொலைபேசி எண் 94428 00449



செம்பட்டியில்
25th
ANNIVERSARY
Jesus Lives
MINISTRIES
ஸ்தோத்திரக்
கூட்டம்
ஏப்ரல்
30
புதன்கிழமை
9:30AM - 2:30 PM
Ev
MOHAN C LAZARUS
Ev
L.VINCENTRAJ
Ev
KALAVINCENT
வேன் வசதி
வேண்டும் என்பவர்கள்
கீழே உள்ள எண்களில்
எங்களுடன் தொடர்பு கொள்ளவும்
இடம்: வானத்தின் வாசல்
எழுப்புதல் ஜெபமையம்,
செம்பட்டி, திண்டுக்கல்.
தொடர்புக்கு : 94980 00449, 94428 00449